திராவிடத்தால் வாழ்கிறோம்

1220

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்

- வாழ்வோம்

உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

162

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கே.பி.பி.சாமி அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

கே.பி.பி.சாமி
பயம் அறியா கன்று!



கழகம் தொடங்கிய காலகட்டத்தில் இருந்தே, வடசென்னை கழகத்தின் கோட்டையாக இருந்தாலும், 'படகோட்டி' படத்தில், எம்.ஜி.ஆர். மீனவராக நடித்த காலம் முதல் தமிழ்நாட்டின் கடலோரப் பழங்குடிகளாக மீனவர்கள் மத்தியில் தனி செல்வாக்குப் பெற்றவராக இருந்ததால், வடசென்னை மீனவர்கள் மத்தியிலும் அ.தி.மு.க. செல்வாக்குக் கொண்டதாக இருந்தது. அப்படி, வடசென்னையில் மீனவர்கள் குடியிருப்புகளில் ஓங்கி இருந்த அந்த செல்வாக்கை உடைத்த உடன்பிறப்பு, கே.பி.பி.சாமி. மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த கே.பி.பி.சாமி, மூத்த முன்னோடிகள் செய்ய முடியாத வகையில், வட சென்னையின் மீனவர் குடியிருப்புகளெங்கும் கழகக் கொடியைப் பறக்கவிட்டதில் மறக்க முடியாதவர். மரணத்தின் தருவாயிலும் மருத்துவப் படுக்கையில் இருந்தபடி, கழகப் பாடல்களை உரத்துப் பாடிய கொள்கை வீரர். முத்தமிழறிஞர் கலைஞர் வளர்த்த அன்பு உடன்பிறப்பு.

சென்னை திருவொற்றியூர் காசி விஸ்வநாதர் குப்பத்தில் 1962-ஆம் ஆண்டு பிறந்தவர் கே.பி.பி.சாமி. அவரின் தந்தை பரசுராமன், கழகத்தின் தொடக்ககால உறுப்பினர். திருவொற்றியூர் நகராட்சி உறுப்பினராக இருந்தவர். தந்தையின் வழியில், கழக அரசியலுக்கு வந்த சாமி, தந்தை பரசுராமன் சூட்டிய பக்கிரிசாமி என்ற பெயரை அரசியலுக்காக கே.பி.பி.சாமி என மாற்றிக்கொண்டவர். அவர் அரசியலில் வளர்ந்த காலகட்டத்தில், தமிழ்த் திரைப்படங்களில் 'பக்கிரி' என்ற பெயர் வைத்தால், கொள்ளையர்கள் அல்லது போக்கிரி கதாபாத்திரங்களாக இருக்கும். அதனால், தனது பெயரில் உள்ள பக்கிரியை இனிஷியலாக மாற்றிக்கொண்டு கே.பி.பி.சாமி என்கிற பெயருடன் வலம் வரத் தொடங்கினார்.

பயம் அறியா கன்று

கழகத்தின் சுறுசுறுப்புமிக்கத் தொண்டராகவும் கழக வளர்ச்சிப் பணிகளில் களவீரராகவும் செயல்பட்டவர், சிறுவயதில் இருந்தே பயம் என்றால் என்னவென்று தெரியாத அளவுக்கு வளர்ந்தவர். 20 வயதிலே அரசியலில் தீவிரமாக இயங்கத் தொடங்கியவர், இளைஞர் அணியில் தொடக்ககாலகட்டத்திலேயே, மாவட்ட அமைப்பாளராகப் பொறுப்பேற்று, சென்னையில் கழக முன்னோடிகளுடன் அரசியல் பாடம் படித்தவர்.

இளைஞர் அணியில் வீச்சாகச் செயல்பட்ட நாட்களில், அவர் பிறந்து வளர்ந்த கே.வி. குப்பம் பகுதியில் கழகத்தின் இருவண்ணக் கொடி அதிகமாகப் பறக்கும் வகையில் செயல்பட்டார். அதனால், மீனவர் குப்பங்கள் தாண்டி மற்ற பகுதிகளிலும் அவரது மக்கள் செல்வாக்கு கவனம் பெற்றது. அ.தி.மு.க. ஆட்சி நடந்த 1980-களின் காலகட்டங்களில் தொடங்கிய அவரது வீச்சு, அம்மையார் ஜெயலலிதா ஆட்சி 1991, 2004 காலகட்டங்களிலும் திருவொற்றியூர் பகுதிகளில் கழகத்தின் செல்வாக்கைத் தளரவிடாமல் பார்த்துக் கொண்டது. மாவட்டக் கழகத்தினருடன் இணைந்து, பல போராட்டக் களங்களிலும் முன்னணியில் நின்றவர்.

கழகப் பணிகளில், போராட்டக் களங்களில் இவர் காட்டிய வேகமும் உறுதியும் கழகத்தின் பல பொறுப்புகளைக் கொண்டுவந்தது. தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில மீனவர் அணிச் செயலாளர் ஆகிய அடுத்தடுத்து அவருக்குப் பொறுப்புகளை அளித்துச் செயல்பட வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். 'பயம் அறியா கன்று' என அவரது அன்பையும் பாராட்டுகளையும் பெற்றவர் சாமி. வடசென்னையில் நடைபெற்ற பல பொதுக்கூட்டங்களில் சாமி அவர்களின் பணிகளை மேடையிலேயே பாராட்டி இருக்கிறார் கலைஞர்.

கழகத்தின் மீனவர் அணி மாநிலச் செயலாளராகப் பணியாற்றி வந்த சாமி அவர்களுக்கு, 2006-ஆம் ஆண்டில் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட வாய்ப்பளித்தார் கலைஞர். சாமி அவர்களின் செல்வாக்கு, கழகத்தினரின் உழைப்பு, தலைவர் கலைஞர் அளித்த நம்பிக்கை எல்லாம் சேர்ந்து, முதன்முதலில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வாகி வந்தவருக்கு, மீன்வளத் துறை அமைச்சராகப் பதவி அளித்து செயல்பட வைத்தார் கலைஞர். அந்தப் பொறுப்பிலும், "மீனவர்களின் நலனே தன் தலையாயப் பணி என்ற எண்ணத்தில், அவர்களின் பிரச்சினைகளுக்காக முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடமும் துணை முதலமைச்சராக இருந்த என்னிடமும் வாதாடி, பல நலத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உற்றத் துணையாகவும் 'மீனவர் சமுதாயத்தின்' விடிவிளக்காகவும் திகழ்ந்தவர்" என்று இன்றைய கழகத் தலைவர் பாராட்டும் அளவுக்குச் செயல்பட்டவர்.

> கே.பி.பி.சாமியின் கள்ளமில்லாத சிரிப்பு என் மனக்கண்ணில் இருந்து மறையவில்லை' என நெகிழ்ந்தார். தலைவரின் மனக்கண் மட்டுமல்ல; கழகத்தின் மனக்கண்ணும் என்றும் மறக்காது.

2011-ஆம் ஆண்டில், திருவொற்றியூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். அப்போது, ஆட்சியில் இருந்த அம்மையார் அரசு, கே.பி.பி.சாமி, மற்றும் அவரின் குடும்பத்தினர் அனைவரையும் பொய்வழக்கில், நள்ளிரவில் வீடு புகுந்து கைதுசெய்து சிறையில் அடைத்தது. கழகத்தின் சட்ட உதவிகள் மற்றும் கலைஞர் மீது அவர் கொண்டிருந்த விசுவாசம் அந்த வழக்கில் இருந்து அவரை மீட்டு, மீண்டும் அவரது பரபரப்பான கழகப் பணியை மீட்டுக் கொடுத்தது.

மீண்டும் 2016-ஆம் ஆண்டு தேர்தலில், அதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மீண்டும் சட்டப்பேரவை உறுப்பினரானார். எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, மீனவர் சமுதாயத்திற்காக சட்டமன்றத்தில் கழகத்தின் குரலாகக் கேள்விகளை எழுப்பியவர். மீன்பிடிப் படகுகளில், 'சீன என்ஜின்' பொருத்துவதற்கு அம்மையார் அரசு அனுமதி அளித்தபோது, அதற்கு எதிராக மீனவர்களை அணிதிரட்டியவர் சாமி.

மருத்துவப் படுக்கையில் கழகப் பாடல்

திராவிட இயக்கக் கொள்கைகளை நெஞ்சில் ஏந்தி பொதுப்பணியில் ஈடுபட்டு வந்த அந்தச் செயல் வீரர், கழகத்தின் மீனவர் அணிச் செயலாளர், உடல்நலக்குறைவு ஏற்பட்டு, தீவிர மருத்துவ சிகிச்சை எடுக்கும் நிலை ஏற்பட்டது. ஓராண்டுக்கு மேல் சிகிச்சை பெற்றுவந்தவர், 2020-ஆம் ஆண்டில், பிப்ரவரி மாதத்தில் தனது 57-வது வயதில் இயற்கை எய்தினார். 'என் இதயத்தைக் கலங்கவைக்கும் துயரச் செய்தி' எனத் தலைவர் எழுதிய இரங்கலில், "அவர் சிகிச்சையில் இருந்தபோது நலம் விசாரிக்கச் சென்றேன். அப்போது தன் உடல்நலம் பற்றிகூட அக்கறை காட்டாமல், தனது தொகுதி மக்கள் குறித்தும், குறிப்பாக மீனவர் சமுதாயத்திற்காக ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் பேசியவர் சாமி. அந்த நேரத்திலும் கழகத்தின் கொள்கைப் பாடல்களைக் குரலெடுத்துப் பாடிய கொள்கை வீரர்" என சாமியின் நெஞ்சுரத்தைப் படம்பிடித்துக் காட்டினார். அவரது திருவுருவப் படத்தினையும் திறந்துவைத்து புகழஞ்சலி செலுத்திய தலைவர், 'கே.பி.பி.சாமியின் கள்ளமில்லாத சிரிப்பு என் மனக்கண்ணில் இருந்து மறையவில்லை' என நெகிழ்ந்தார். தலைவரின் மனக்கண் மட்டுமல்ல; கழகத்தின் மனக்கண்ணும் என்றும் மறக்காது!

...துடிக்கும்

ஒப்பற்ற தலைவர் கலைஞர்!

சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 103-வது பிறந்தநாள் விழா நடைபெற்றது. அந்த விழாவில் பேசிய ஆன்மிக சொற்பொழிவாளர் சுகி.சிவம், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மாபெரும் தலைவர் கலைஞர் என்பதை மிக அற்புதமாக விளக்கிய தருணங்கள் இணையத்தில் வைரலாகியுள்ளன.

அவர் பேசும்போது, "வெளியில் இருந்து பார்க்கிறபோது நரேந்திர மோடி ஒரு பலமுள்ள மனிதராகக் காட்டப்படுகிறாரே ஒழிய, மிகத் தெளிவாகச் சொல்கிறேன், அவர் ஒரு சோளக்கொல்லை பொம்மை. உண்மையான ராட்சசன் இந்த நாட்டை ஆட்டி வைக்கக்கூடிய வலிமை உடையவர் இன்றைக்கு அந்த மனிதர் யார்? நான் சொல்கிற ஆர்.எஸ்.எஸ். உடைய மோகன் பகவத். ஏன் சொல்கிறேன் என்றால், நூறு ஆண்டுகளுக்கு முன்பு காந்தியடிகள் வீழ்ச்சி அடைந்த பிறகு, காந்தியடிகளுடைய உடல் இந்த மண்ணிலே விழுந்த பிறகு அன்று ஒரு விதை போட்டார்கள். இந்த நாட்டை எப்படி முழுமையாக 100 ஆண்டுகளுக்குள் தாங்கள் நினைப்பது போல் கொண்டுபோக வேண்டும் என்று வெறித்தனமாக ஒரு கூட்டம் திட்டமிட்டது. அவர்கள் திட்டத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தைதான் ஒவ்வொரு காலகட்டத்திலும் நாம் சந்தித்துக்கொண்டிருக்கிறோம்.

உண்மையில் இப்போது நடப்பது உங்களுக்கு இந்திய அளவிலே ஒரு ஜனநாயக ஆட்சி அல்ல. ரஷ்யாவில் எப்படி கம்யூனிச சர்வாதிகாரம் வளர்ந்திருக்கிறதோ, சீனாவில் எப்படி கம்யூனிச சர்வாதிகாரம் வளர்ந்திருக்கிறதோ அப்படி ஒரு இந்து சர்வாதிகாரத்தை ஆர்.எஸ்.எஸ். கொண்டுவர விரும்புகிறது. இந்து சர்வாதிகாரம் என்ற ஒன்று இந்தியாவில் ஏற்பட்டுவிட்டால், இந்த நாடு அன்றோடு வீழ்ச்சி அடைந்துவிடும். அதன் பிறகு இந்த நாட்டை எழுப்பி நிறுத்துவது கடினம். அது நடக்காமல் இருப்பதற்கு ஒவ்வொரு காலத்தில் ஒரு தலைவனை இந்த உலகம் கொடுத்தது. அப்படிப்பட்ட தலைவனில் ஒப்பற்ற தலைவன்தான் கலைஞர்" என்றார்.

ஃப்ளாஷ்பேக்

கே.திலகர்

காஞ்சிபுரத்தில் தலைவருடன்...

1993-ஆம் ஆண்டு, கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காஞ்சிபுரம் வருகைதந்தார். கழக முன்னோடி அய்யா சி.வி.எம்.அண்ணாமலை அவர்களைச் சந்தித்து உடல் நலம் விசாரித்துவிட்டு, அங்கிருந்து செய்யாறு சென்று, அய்யா புலவர் கோவிந்தன் அவர்களைப் பார்க்கச் சென்றார். அப்போது, காஞ்சிபுரம் நகராட்சி 8-வது வட்டக் கழகச் செயலாளராகச் செயல்பட்டு வந்த நான், அய்யா சி.வி.எம்.அண்ணாமலை இல்லத்தில், தலைவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம். 30 ஆண்டுகளைக் கடந்தும் உயிர்ப்போடு என்னை இயக்கிக் கொண்டிருக்கும் படம்.

- கே.திலகர்,
1-வது பகுதிச் செயலாளர்,
காஞ்சிபுரம் மாநகரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

மலரும்

எதிர்நீச்சலில் வெற்றி பெற்றவர்கள்!

1954-ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் சிலர் தனிப்பட்ட முறையில் போட்டியிட்டு வெற்றிபெற்றனர். வட ஆற்காடு மாவட்ட தி.மு.கழகச் செயலாளர் ஏ.எல்.சி. கிருஷ்ணசாமி, பொதுக்குழு உறுப்பினர் எடப்பாடி தாண்டவன், திருவொற்றியூர் கணபதி உள்ளிட்டோர் வெற்றிபெற்றனர். 'எதிர் நீச்சலிடுவது போன்ற செயலில் இறங்கி வெற்றி பெற்றவர்கள் என்கிற முறையில், நமது தோழர்கள் பாராட்டுக்குரியவர்கள்' என எழுதியது 'திராவிட நாடு'.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900